# நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன். யாத் 33 : 14

**பக்தன் பாடுகிறார்**

இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்.

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பை கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே – என்பதாக

இளைப்படைந்து போன சகோதரியே, சகோதரனே

உன் சரீரத்திலா அல்லது ஆத்துமாவிலா அல்லது ஆவியிலா ? எதிலே இளைப்படைந்து போனீர்கள் ? எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டுமே.

**பக்தனின் பாடல்களையே நினைவுகூர்ந்து பாடுங்கள்.**

சரீரம், ஆத்துமா, ஆவியினாலும், சோர்ந்து போகும் வேளையிலெல்லம்
துதி சத்தத்ததால் உள்ளம் நிறைந்தால் தூயரின் பெலன் கிடைக்கும்.

ஆம், சகோதரனே, சகோதரியே,

உனக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்படியாக, உள்ளம் நிறைந்து துதி, பாடு. பாடிக்கொண்டே இரு.

**பக்தன் பாடுகிறார்**

நன்றியால் துதிபாடு உன் இயேசுவை, உள்ளத்தால் என்றும் பாடு

இளைத்துப்போன நேரமும், களைத்துப்போன நேரமும் துதிபாடு. இந்த துதியானது உன்னை சிலுவைக்கு நேராக அழைத்துச் செல்லும். அந்த சிலுவையிலிருந்து ஒரு நிழல் தோன்றும். அது இயேசுவின் நிழல். அந்த நிழல் உன் சரீரத்தையும், ஆத்துமாவையும் ஆவியையும் இளைப்பாறப் பண்ணும்.

**நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்**

**வேதம் சொல்கிறது :** வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். என்பதாக.

பொதுவாக சுவிசேஷ ஊழியத்தில் மற்றவர்களுக்கு பிரசங்கிக்கும் பொழுது சாதாரணமாக சொல்லும் ஒரு வசனம் தான் மேற்கண்ட வசனம். ஆனால் இந்த மாதம் இந்த வசனத்தை ஆவியானர் உனக்காகவே ஆணித்தரமாகக் கொடுக்கிறார் என்று விசுவாசியுங்கள். நீ வருத்தப்பட்டுப்போய் மனதில் பாரம் சுமக்கிறவன். ஆனால ஒரு உண்மையான ஊழியக்காரன். உனக்குள்ளதையெல்லாம் கொடுத்தாய். உன் வேலையின் மத்தியிலும் கர்த்தருக்கு உன் நேரத்தைக் கொடுத்தாய். ஆனால் இன்று உனக்கு யாரும் கைகொடுக்க முன்வரவில்லை.

நீ ஒரு தனித்த குருவியைப்போல் இருக்கிறாய். இயேசுவின் மேலும் உன் அன்பு குறைகிறது. சில நேரம் உன்னை தேற்றிக்கொள்கிறாய். சில நேரம் விசுவாச புருஷனாய் மாறிவிடுகிறாய்.

**இவைகளெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். சிலுவைக்கு வாருங்கள்,**
**சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பாருங்கள்.**
**உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்.**

இவ்வளவு நாளும் அவர் மேல் தானே என் கவலையை வைத்திருக்கிறே. பின் யாரிடம் வைத்திருக்கிறேன் என்று எதிர் குரல் எழுப்பும் சகோதரனே, சகோதரியே,

தொடர்ந்து இயேசுவிடமே உன் கவலையை வை. இயேசு தாமே உன் கவலையை மாற்றாவிட்டால், பின்பு இனிமேல் இந்த உலகில் யார் உன் கவலையை மாற்றப்போகிறார்கள்.

**இயேசு கிறிஸ்துவினாலேயன்றி, வேறொருவராலும் உனக்கு இரட்சிப்பு இல்லை.**

ஆதலால் அவரையே நோக்கிப்பாருங்கள். சிலுவை நோக்கிப்பார்த்த கண்கள் சூழ்நிலைகள் மாறினாலும், வெட்கமடைந்து போவதில்லை. ஆதலால் கர்த்தருடைய வாக்குத்தத்தை விசுவாசியுங்கள்.

**நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன். ஆமென்.**